# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2481/22 - 2026 මාර්තු මස 27 වැනි සිකුරාදා - 2026.03.27

*2481/22 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம்**

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் ருக்தேவி பபெசுவா ஹிமாலி பர்ணாந்து ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், 2006 யூலை 01 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில், பெறுமதிசேர் வரி தொடர்பில் இவ் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான படிவத்துடன், சகல பதிவுசெய்யப்பட்ட ஆட்களினாலும் வழங்கப்பட வேண்டிய வரி விலைப்பட்டியல் படிவம் மற்றும் விபரக்குறிப்புக்கள் தொடர்பில் இக் கட்டளை மூலம் உரியவாறு குறிப்பிடப்படுகின்றது.

தேவைக்கேற்ப, ஆணையாளர் நாயகம் இந்தப் படிவத்தையும் விபரக்குறிப்புகளையும் காலத்திற்குக்காலம் திருத்தலாம்.

2025, நவெம்பர் 17 ஆம் திகதிய 2463/05 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் வெளியிடப்பட்ட படிவம் மற்றும் விவரக்குறிப்புகள் தொடர்ந்தும் மாற்றுத் தேர்வாகக் காணப்படுவதுடன், 2026, யூலை 01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இத்தால் இரத்து செய்யப்படுகின்றது.

**ருக்தேவி பபெசுவா ஹிமாலி பர்ணாந்து,**
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

உள்நாட்டு இறைவரி திணைக்களம்,
கொழும்பு,
2026, மார்ச்சு 27.

1A - G 46518 — 04 (2026/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இணைப்பு

வரி விலைப்பட்டியல் விபரக்குறிப்பு

1. தலைப்பு

1.1 இவ்விபரக்குறிப்புகளின்படி வழங்கப்படும் ஒவ்வொரு விலைப்பட்டியலையும் "வரி விலைப்பட்டியல்" என்று தெளிவாகப் பெயரிடப்படல் வேண்டும்.

1.2 தலைப்பு தெளிவாக அடையாளம் காணக்கூடிய வகையில், தடித்த கறுப்பிலான அல்லது ஹைலைட் செய்யப்பட்ட எழுத்தினைப் (highlighted text) பயன்படுத்தி ஆவணத்தின் முகப்பில் தென்படக் கூடியவாறு இடப்படல் வேண்டும்.

2. பெறுமதி சேர் வரி (VAT) பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்குனர் தொடர்பான விபரங்கள்

2.1 வரி விலைப்பட்டியலின் இடது பக்கமேல் மூலையில் வழங்குநர் தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்ட தகவல்கள் குறிப்பிடப்படவேண்டும். அதாவது :

அ. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழங்குநரின் (உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட ஒன்பது (09) இலக்கங்களைக் கொண்ட )வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) ;

ஆ. வழங்குநரின் பெயர்;

இ. வழங்குநரின் முகவரி;

ஈ. தொலைபேசி இலக்கம் (கட்டாயமற்றது).

3. பெறுமதி சேர் வரி (VAT) பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொள்வனவாளரின் விபரங்கள்.

3.1 வரி விலைப்பட்டியலில் வலது பக்க மேல் மூலையில் அல்லது விநியோகஸ்தர் தொடர்பான விபரங்களுக்கு கீழ் கொள்வனவாளர் தொடர்பான தகவல்களை குறிப்பிட வேண்டும். அதாவது :

அ. கொள்வனவாளர் பதிவு இலக்கம் (உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட ஒன்பது இலக்கங்கள் (09) கொண்ட) வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) ;

ஆ. கொள்வனவாளரின் பெயர்;

இ. கொள்வனவாளரின் முகவரி;

ஈ. தொலைபேசி இலக்கம் (கட்டாயமற்றது).

4. விலைப்பட்டியலின் விபரங்கள்.

4.1 வரி விலைப்பட்டியலில் குறைந்தபட்சம் பின்வரும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் :

அ. விலைப்பட்டியல் தொடர் இலக்கம் -
அனைத்து பதிவுசெய்யப்பட்ட ஆட்களும் விலைப்பட்டியலில் தொடர் இலக்கத்தினைக் குறிப்பிடும் போது பின்வரும் மாதிரியினை கடைப்பிடிக்க வேண்டும் :
YYMMM_QQQQ_XXXXX, இதன் போது

i. “YY” என்பது விலைப்பட்டியல் வழங்கப்பட்ட ஆண்டின் கடைசி இரண்டு இலக்கங்களைக் குறிக்கிறது;

ii. “MMM” என்பது விலைப்பட்டியல் வழங்கப்பட்ட மாதத்தின் ஆங்கிலப் பெயரின் முதல் மூன்று எழுத்துக்கள் கெபிடல் (Capital) எழுத்துக்களில் குறிப்பிடல் வேண்டும் ;

iii. “QQQQ” என்பது கிளைகள், பிரிவுகள், அலகுகள், செயற்திட்டங்கள், வாடிக்கையாளர்கள் அல்லது வேறு ஏதேனும் வகைப்பாடு உள்ளிட்ட பல்வேறுபட்ட உருவக அமைப்புகளை அடையாளம் காண்பதற்காக பயன்படுத்தப்படும், எழுத்துக்கள் மற்றும் இலக்கங்கள் கொண்ட குறியீடாகும். அத்தகைய குறியீடு, பரிந்துரைக்கப்படக்கூடியவாறு, குறைந்தபட்சம் ஒரு இலக்கத்தையாவது கொண்டிருக்க வேண்டியதுடன், இலக்கங்களின் எண்ணிக்கை பதினைந்து இலக்கங்களை விட அதிகரிக்காது இருக்க வேண்டும்.

iv. “XXXXX” என்பது விலைப்பட்டியலின் எண்ணிக்கை தொடர் இலக்கம் என்பதுடன் இது முற்றிலும் எண்களை மாத்திரம் கொண்டிருக்க வேண்டியதுடன், அகரவரிசையில் எந்தவொரு எழுத்துக்களோ அல்லது குறியீடுகளோ இடம்பெறக்கூடாது. அவ்வாறான தொடர் இலக்கம், கடந்த மாதத்தில் வழங்கப்பட்ட இறுதி இலக்கத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும். இது எவ்வாறாக. இருப்பினும், தேவைப்படும் சந்தர்ப்பங்களில், இந்த இலக்கங்களை இடுவது ஒவ்வொரு மாதம் அல்லது ஆண்டின் தொடக்கத்திலிருந்து மீண்டும் ஆரம்பிக்க முடியும்.

v. மேற்கூறப்பட்ட கட்டாய இலக்கங்கள், எழுத்துக்கள் மற்றும் குறியீடுகள் உட்பட, விலைப்பட்டியலின் தொடர் இலக்கத்திற்கு, எந்த இடைவெளிகளையும் (space) அடங்கக் கூடாது என்பதுடன் எழுத்துக்கள் (40) விஞ்சாது இருக்க வேண்டும்.

உதாரணம் : 2026 யூலை மாதம், கிளை 03 (**BRO3**) இனால் வழங்கப்பட்ட முதலாவது வரி விலைப்பட்டியலின் தொடர் இலக்கம் பின்வருமாறு இருக்க வேண்டும் :

**26JUL_BR03_1**

ஆ. **விலைப்பட்டியல் திகதி -** விலைப்பட்டியல் வழங்கப்பட்ட திகதி MM/DD/YYYY வடிவத்தின் ஊடாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

இ. **வழங்கல் இடம் -** வரி விலைப்பட்டியல் வழங்கப்படும் இடம் பொருட்கள் அல்லது சேவை வழங்கல் முதலில் ஆரம்பமாகும் இடத்தில் இருந்து மாற்றமடையும் வேளையில் அவ்வாறு விநியோகம் ஆரம்பமாகும் இடத்தினை வெளிப்படுத்த முடியும் (கட்டாயமற்றது).

ஈ. **வழங்கல் திகதி -** பொருட்கள் அல்லது சேவை வழங்கப்பட்ட திகதி MM/DD/YYYY வடிவத்தின் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

உ. **வழங்கல் தொடர்பான விபரங்கள் -** வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான தெளிவான விபரங்கள்.

ஊ. **அளவு அல்லது பரிமாணம் -** வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளில் அளவீடு செய்ய முடியுமான அளவு.

எ. **வழங்கலின் பெறுமதி -** சதப் பெறுமானம் (இரண்டு தசம்கள்) கொண்ட இலங்கை ரூபாக்களில் குறிப்பிட வேண்டியதுடன் அதில் உள்ளடக்கப்பட வேண்டியது :

i. பெறுமதிசேர் வரி (VAT) தவிர்ந்த செலுத்தப்பட வேண்டிய தேறிய தொகையாக வழங்கலின் பெறுமதி;
ii. அந்த வழங்கலின் பெறுமதி மீது விதிக்கப்படும் பெறுமதி சேர் வரி (VAT);
iii. பெறுமதி சேர் வரி (VAT) உட்பட அல்லது கிடைக்க வேண்டிய மொத்தப் பெறுமதி.
iv. மொத்தப் பெறுமதி சொற்களின் மூலம். (கட்டாயமற்றது)

ஏ. கொடுப்பனவு முறை - பணம் செலுத்தும் முறையானது ரொக்கமாக, வங்கிப் பரிமாற்றம் மூலமாக, காசோலை மூலமாக, கடன்/ பற்று அட்டை மூலமாக, கையடக்க சாதனம் மூலமாக மேற்கொள்ளும் கொடுப்பனவு, அல்லது இணையவழி மூலம் கொடுப்பனவு செலுத்துதல் எனக் குறிப்பிடப்படல் வேண்டும். வரி விலைப்பட்டியல் வழங்கும் சந்தர்ப்பத்தில் கொடுப்பனவு மேற்கொள்ளும் முறையைக் குறிப்பிடுவது நடைமுறை சாத்தியமில்லாத பட்சத்தில், கொடுப்பனவு செலுத்துவதற்கு எதிர்பார்க்கும் முறையினைக் குறிப்பிட முடியும் (கட்டாயமற்றது).

4.2 வரி விலைப்படியலில் விஷேடமாக பெறுமதி சேர் வரி (VAT) இற்கு உட்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் மாத்திரம் உள்ளடக்கப்பட வேண்டும்.

5. வழங்கல் தொடர்பான மேலதிக தகவல்கள்.

5.1 பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பில் உரிய தகவல்கள் இருப்பின் வழங்குநர் குறிப்பிடல் வேண்டும். வழங்குநருக்கு, அவசியமாயின், பொருட்கள் அல்லது சேவை வழங்கல் தொடர்பில் உரியவாறு மேலதிக தகவல்களைக் குறிப்பிட முடியும்.

6. மாதிரி விலைப்பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

6.1 கீழே உள்ள படிவத்தை வரி விலைப்பட்டியலுக்கான மாதிரியாகப் பயன்படுத்த முடியும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரக்குறிப்புகளுக்கு அமைவாக விநியோகஸ்தருக்கு தேவையான மாற்றங்களைச் செய்து கொள்ள முடியும்.

6.2 பொருட்கள் மற்றும் சேவைகளின் வழங்கல் தொடர்பான மேலதிக தகவல்களைக் குறிப்பிடுவதற்காக, வழங்குநருக்கு தேவைக்கேற்ப வரி விலைப்பட்டியலில் மேலதிக பந்திகளையும் வரிசைகளையும் சேர்க்க முடியும்.

6.3 வழங்குநர் தமது இலச்சினை, வர்த்தக அடையாளம் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய தகவல்களை வரி விலைப்பட்டியலின் தலைப்பில் (header) மற்றும்/ அல்லது அடிக்குறிப்பில் (footer) காண்பிக்க முடியும்.

6.4 நட்சத்திரக் (*) குறியீட்டுடன் குறிப்பிடப்பட்டுள்ளவை கட்டாயமற்றது என்பதுடன் வழங்குநரிடம் அதற்கான தகவல் இருப்பின் அவை வரி விலைப்பட்டியலில் குறிப்பிட முடியும்.

## வரி விலைப்பட்டியல்

| | |
|---|---|
| விலைப்பட்டியல் திகதி : | வரி விலைப்பட்டியல் இல. : |
| வழங்குநரின் TIN :<br>வழங்குநரின் பெயர்:<br>முகவரி :<br><br>தொலைபேசி இல. :* | கொள்வனவாளரின் TIN :<br>கொள்வனவாளரின் பெயர் :<br>முகவரி :<br><br>தொலைபேசி இல. :* |
| வழங்கல் திகதி : | வழங்கல் இடம் *: |

மேலதிக தகவல்கள் ஏதேனும் இருப்பின் :*

| குறிப்பு* | பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான விபரங்கள் | அளவு | அலகு விலை | பெ. சே. வரி தவிர்ந்த பெறுமதி (ரூபா.) |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்த தொகை (எழுத்தில்) : | | | | |
| | | | | |
| வழங்கலின் மொத்த பெறுமதி : | | | | |
| பெ.சேர். வரி தொகை (வழங்கலின் மொத்த பெறுமதி @ பெ. சேர். வரி வீதம்) | | | | |

மொத்த தொகை / பெ.சேர். வரி உள்ளடங்கலாக கருத்திற் கொள்ளவேண்டிய மொத்த தொகை

மொத்த தொகை சொற்களில் :*

கொடுப்பனவு முறை :*

EOG 03-0219

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.